முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (6.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு மீனவர் சங்கத்தின் தலைவர் – துரை மகேந்திரன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, – கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அவர்களை மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக அறிவித்து வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதையொட்டி நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ.ராசா, என்.ஆர். இளங்கோ, கழக செய்தி தொடர்பு தலைவர் – டி.கே.எஸ். இளங்கோவன், கழக அமைப்புச் செயலாளர் – ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்புக் குழு செயலாளர் – கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (6.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், இந்திய மீனவர் நல முன்னணி சங்கத்தின் தலைவர் மா.கி. சங்கர் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அவர்களை மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக அறிவித்து வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதையொட்டி நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ. ராசா, என்.ஆர். இளங்கோ, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்புக் குழு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் – வனத்துறை சார்பில்

பல்வேறு முன்னெடுப்புகள் துவக்கம் - விருதுகள் வழங்கும் விழா!

அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் நடைபெற்றது!

சென்னை. மார்ச் 7-

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று. தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் பல்வேறு அரசு முன்னெடுப்புகளின் துவக்கம் மற்றும் விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது.

நிதி மற்றும் சுற்றுச்சூழல் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில். சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹூ. முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர். தமிழ்நாடு வனத்துறை. ஸ்ரீநிவாஸ் ரெட்டி. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர். முனைவர். எம்.ஜெயந்தி. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஆ.ர.ராகுல் நாத். தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர். அரசு ரப்பர் கழகம். என்.சதீஷ். திட்ட இயக்குநர். தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம். சுமேஷ் சோமன். தலைமை செயல் அதிகாரி. பகான் ஜகதீஷ் சுதாகர். இயக்குநர். காலநிலை மாற்றத்திற்கான இந்தோஜெர்மன் ஒருங்கிணைவு முனைவர். அலெக்சாண்டர் ஃபிஷெர். ஜஜடி. மெட்ராஸ். பேரா. இந்துமதி நம்பி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தனித்துவ முயற்சியான தன்னார்வ பசுமை மதிப்பீட்டு திட்டத்தின் கீழ் சிறந்த சுற்றுச்சூழலுக்கு ஏற்ற நடைமுறைகளை பின்பற்றி செயல்பட்ட 10 தொழிற்சாலைகளுக்கு தன்னார்வ பசுமை மதிப்பீட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் "தமிழ்நாட்டின் நீலக்கொடிக் கடற்கரைகள்", எனும் அறிக்கையினை வெளியிட்டார்.

மேலும். மாநிலம் முழுவதும் சிறந்த சுற்றுச்சூழல் பங்களிப்பிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 100 விருதுபெறுபவர்களில் ஒரு பகுதியாக. 5 பேருக்கு பசுமை முதன்மையாளர் விருதுகளை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மேலும். துணிப்பைகள் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்று பொருட்களை ஊக்குவித்து. தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை ஒழிக்கும் பணியில் சிறப்பாக செயல்பட்ட 3 பள்ளிகளுக்கும் 3 கல்லூரிகளுக்கும் "மீண்டும் மஞ்சப்பை" விருதுகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து. கடல்சார் கழிவுகளைக் கண்காணித்து நிலையான கடற்கரை சூழலை ஊக்குவிக்கும் வகையில் கோவளம் நீலக் கொடி கடற்கரையில் "சுற்றுச்சூழல் நிலைத்திறன் மையத்தை" காணொளி மூலம் தொடங்கிவைத்தார் . மேலும். கடலுக்கு செல்லும் முன் நீரில் மிதக்கும் கழிவுகளை தடுக்க நெய்தல் மீட்சி இயக்கத்தின் கீழ் (TN SHORE) மிதக்கும் கழிவுகளைத் தடுக்கும் இடைமறிப்பான்கள் (Floating Trash Boom Barrier) அமைப்பையும் காணொளி மூலம் தொடங்கிவைத்தார் .

மேலும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மணலி - எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிர் அமைப்பு மன்றத்தின் (MERRC) சார்பில் மாநிலம் முழுவதும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு. அவசரகால நடவடிக்கை மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகளை வலுப்படுத்தும் வகையில் இரண்டு நடமாடும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு வாகனங்களை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

மேலும். அரசு ரப்பர் கழகத்தின் நிர்வாக இயக்குநர் என். சதீஷ் அவர்களால் 2025-2026-ஆம் ஆண்டிற்கான இடைக்கால ஈவுத்தொகை ரூ.3.52 கோடியினை அரசிற்கு வழங்கினார்.

இந்நிகழ்வின் போது. தமிழ்நாடு அரசு. சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை சார்பில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் கல்வி. சுற்றுச்சூழல் பாதுகாப்பு. சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் பத்து நபர்களுக்கு நிதி. சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்களால் சுற்றுச்சூழல் விருதுகள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் சார்பில். செயல்படுத்தப்பட்டு வருகின்ற தமிழ்நாடு புதுமைத் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 புதுமைத் தொழில் முனைவுகளுக்கு வழங்கப்பட்டு வரும் ஆதார நிதியின் இறுதித் தவணை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மேலும். நீலக்கொடி அங்கீகாரத்தை நோக்கி முன்னேறும் கடற்கரைகளான கடலூர் மாவட்டத்தின் வெள்ளிக் கடற்கரை. இராமநாதபுரம் ட்மாவட்டத்தின் அரியமான் கடற்கரை. நாகை மாவட்டத்தின் காமேஷ்வரம் ஆகிய கடற்கரைகள் திறந்து வைக்கப்பட்டன. அத்துடன். தமிழ்நாட்டின் நீலக்கொடிக் கடற்கரைகள். செயல்பாட்டு வழிமுறைகள் மற்றும் நிலைத்தக கடலோர சுற்றுலாவிற்கான வருவாய் அமைப்பு. தமிழ்நாட்டில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழி ஒழிப்பின் காலநிலை இணைபலன்க ளை மதிப்பிடுவதற்கான வழிமுறைகளை செயல்படுத்துவதற்கான செயல்திட்டம் மற்றும் தமிழ்நாட்டில் நகர்ப்புற வனவியல் முன்னெடுப்புகளின் காலநிலை இணைபலன்களை மதிப்பிடுவதற்கான செயல்திட்டம் ஆகிய அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆலோசனை வழங்குகிறார்!

திருவல்லிக்கேணி பகுதி வட்டச் செயலாளர்கள் - பகுதி அமைப்பாளர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி. அறிக்கை!

சென்னை, மார்ச். 07 -

திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி. எம்.காமராஜ் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (07.03.2026 சனிக்கிழமை) காலை 10 மணி அளவில், எண். 28/20, கஜடி பேகம் தெரு, இராயப்பேட்டையில் நடைபெறுகிறது.

பகுதி அவைத் தலைவர் ம.தயாநிதி தலைமை வகிக்கிறார்.

வி.பி.பொன்னரசு, ஆர். என்.துரை, அ.சுபேர்கான், வி.என்.ராஜன், ப.பிரகாஷ், ஏ.விஜயராஜ், இ.இளம்பாரதி, கமலா செழியன், ரவி ராஜ்குமார், எம்.கே.ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

எனவே வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

மார்ச் 9 அன்று திருச்சியில் நடைபெறும் மாநாடு குறித்தும் மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி. தெரிவித்துள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி பிரதிநிதி அசோக்குமாரின் இல்ல திருமண விழாவில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ் சுதர்சனம் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார் உடன் வட்ட செயலாளர் டி சுந்தரம், மாமன்ற உறுப்பினர் திருமலை ஜி. துரைசாமி, மாவட்ட மருத்துவர் அணை அமைப்பாளர் ஜி. பார்த்தசாரதி, எஸ். முத்து. எஸ். பி.கண்ணன், திருமலைசாமி எஸ்.பூபதி, விக்னேஷ், வெற்றிவேல், டி.குருமூர்த்தி, வீ.டீ.டி. மூர்த்தி, வி.பாஸ்கர், டி.வி.எஸ். உதயநிதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட மணிமகுடம்!

அன்னை சொர்ணம்,
கல்யாண சுந்தரர்
அருமைத் திருமகனார்!
ஐயா, அண்ணா
வழியில் வந்த
அறிவுப் பெருமகனார்!
பொன்னெழுத் தாலே
பொறிக்கப் படுமோர்
புகழின் திருவுடையார்!
பூக்களை வெல்லும்
புன்னகை மின்னும்
பொலிவின் எழிலுடையார்!

குறைந்திட லற்றக்
குணத்தின் கடலாம்!
கொள்கைக் குறள்நெறியார்!
கொடுத்துப் பதிலைத்
தொடுக்கும் சிந்தனைக்
கூர்மை முனைமுறியார்!
அறம்தான் உயிராம்!
மறந்தும் வாழ்வில்
அரசியல் பிழையறியார்!
அன்பழ கர்! உயர்
பண்பழ கர்!தமிழ்
அமுத மொழிநடையார்!

தனக்குக் கழகம்,
தமிழ், தமிழ் நாடு
தவிர வேறறியார்!
தன்மா னத்தின்
தகைசால் ஏந்தல்!
தாடியில் லாப்பெரியார்!
"எனக்குக் கிடைத்த
இன்னோர் அண்ணன்"
என்றுரைத் தார்கலைஞர்!
"என்பெரி யப்பா"
இழந்தேன் அவரை,என்
றழுதார் தளபதியார்!

வெற்றிலை மீது
சுண்ணாம்பை அளவாய்த்
தடவும் விரல்அழகு!
வெண்கல மணிபோல்
கிண்கிணீர் ஓசை
விளையும் குரல்அழகு!
சற்றும் மங்காத
சூரிய வெளிச்சம்
பொங்கும் விழியழகு!
சட்டைப் பொத்தான்
இடத்தில் மாறித்
தங்கும் தனியழகு!

தோட்டா வைப்போல்
துளைத்துப் பகையைச்
சொல்லால் சுடும்அழகு!
தோளில் கிடக்கும்
துண்டை எடுத்துத்
தோளில் இடும்அழகு!
" காட்டூ ரார்" இவர்
களத்தில் செந்தமிழ்க்
கணைகள் விடும்அழகு!

கடக்களி றொப்ப
நடக்கும் அழகு!
கண்ணே படும்அழகு!

அசையும் ஒவ்வோர்
அடியும் முட்கள்!
அனைத்தும் கடந்த திடம்!
ஆயிரம் ஆண்டுகள்
அழியாச் சுவடுகள்!
அண்ணல் நடந்த தடம்!
திசைகள் வணங்கிடும்
செம்மல்! கல்விச்
செந்தேன் நிறைந்தகுடம்!
தீட்டும் சரித்திரம்
காட்டும் வரிசையில்
" திராவிட மணிமகுடம்!"

பீடு தரும்!தனிப்
பெருமை தரும்!அவர்
பேச்சே சொரணைதரும்!
"பெருமிதம்" என்றால்
"பேரா சிரியர்"
பெயரே நினைவுவரும்!
நீடு நெடும்புகழ்
நிலைத்திருக் கும்!அவர்
நிழலும் அழகுபெறும்!
நித்திரைக் குள்ளும்
கனவாய் வருவார்!
நெஞ்சம் அமைதியுறும்!

... கவிச்சுடர்
கவிதைப்பித்தன்.

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை! சைதை சாதிக் பங்கேற்பு! முதல்வர் பிறந்தநாள்:

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

மாவட்ட கழக பொறுப்பாளர் – வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிக்கை

திருவள்ளூர் 07:--

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் பிறந்த நாள் விழா முன்னொட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்டம் உதவிகள் வழங்கும் விழா இன்று 07-03-2026 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் பொன்னேரி தொகுதி மீஞ்சூர் வடக்கு ஒன்றியம் மேதூர் பஜார் பகுதியில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ் ராஜ் தலைமையில் நடைபெறுகிறது

இதில் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் மு.முரளிதரன். . நா.செல்வசேகரன். வே.ஆனந்த் குமார்

ஆ.ராஜா. ஏ.ஆர்.டி.உதயசூரியன் ஜி.ரவிக்குமார் . கா.சு.ஜெகதீசன். பி.முத்து. க.சு.தமிழ் உதயன் ஆகியோர் வரவேற்புரையற்றிகிறார்கள்

மாவட்ட அவைத் தலைவர் மு. பகலவன். நிர்வாகிகள் கே.வி. ஜி.உமாமகேஸ்வரி. மு.கதிரவன். எம்.எல்.ரவி . எஸ்.ரமேஷ். கே.சுப்பிரமணி. பி. வெங்கடாஜலபதி. பா. செ.குணசேகரன். பரிமளம்விஸ்வநாதன். ஏ.வி.ராமமூர்த்தி . ஆர்.கருணாகரன் வி.ரவி மு.ராஜேந்திரன் அ.மீனா ஆர்.ரவிச்சந்திரன் ம.ராஜசேகர் ச.ஆறுமுகம் சி.எம்.ரமேஷ். ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் இக்கூட்டத்தில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் - கழக செய்தி தொடர்பு துணை செயலாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் கலந்து கொண்டு கழக சாதனைகளை சிறப்புரையற்றி பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்கள் இதில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன் எம். எல்.ஏ. இ.ஏ.பி.சிவாஜி. ஜெ.மூர்த்தி. மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர். சுரேஷ்செல்வராஜ். வீ.கவி கணேசன். K.G.பாஸ்கர்சுந்தரம். வெ.அன்புவாணன். ஜி.ஸ்டா லின். ஏ. கே.சுரேஷ். ஜி.ராபர்ட்ராஜதுரை ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர். கி.வேணுஆனந்த். ஆ.சத்தியவேலு. மு.மணிபாலன். ந.பரிமளம். அபிராமிகுமரவேல். இரா.அறிவழகன் மு.ஜான்(எ) பொன்னுசாமி. ருக்மணி மோகன் ராஜ். அப்துல் ரஷீத். சகிலாஅறிவழகன். .குமரவேல். ப.அலெக்சாண்டர் எம்.கேசவன் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

மு. இ. ஏழுமலை தலைமை! நந்தனம் கி.மதி எம்.சி. முன்னிலை!

123வது வட்ட இளைஞர் அணி சார்பில் மாணவ - மாணவியர்களுக்கு உபகரணங்கள்!

மயிலை த. வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை. மார்ச். 7-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 123 வது வட்டக் கழகத்தில் இளைஞர் அணி சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு கழக இருவண்ண கொடியேற்றி இனிப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவ - மாணவிகளுக்கு படிப்பு உபகரணங்கள் வழங்குதல் மற்றும் அறுசுவை உணவு வழங்குதல் இன்று 07.03.2026 நடைபெறுகிறது.

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் - நடைபெறும். இடங்கள் விபரம் வருமாறு

1. பகுதி துணை அமைப்பாளர் என் உதயன் - திருவள்ளுவர் சாலை வ உ சி தெரு சந்திப்பு.

2. வட்ட அமைப்பாளர் ச. கணேஷ்- திருவள்ளுவர் சாலை.

3. வட்ட துணை அமைப்பாளர் இ.ஹரிஹரன் - அப்பாதுரை தெரு சந்திப்பு.

4. வட்ட துணை அமைப்பாளர் கு.சிரஞ்சீவி - வன்னியபுரம் திருவள்ளூர் சாலை சந்திப்பு.

5. வட்ட துணை அமைப்பாளர் கு. சீனிவாசன் - காமராஜர் தெரு பெரியார் சாலை சந்திப்பு .

6. வட்ட துணை அமைப்பாளர் சு விஜய் - இராமலிங்கேஸ்வரர் தெரு. எல்டாம்ஸ் சாலை சந்திப்பு.

7. வட்ட துணை அமைப்பாளர் மா. தமிழ்ச்செல்வன் - கால்வாய்க்கரை சாலை. சி.பி. ராமசாமி சாலை. சந்திப்பு.

இந்நிகழ்ச்சிக்கு தென்மேற்கு மாவட்ட செயலாளரும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினருமான மயிலை வேலு எம்.எல்.ஏ., மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., மாநிலத் துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ். ஜோயல். மாநில ஆலோசகர் தகவல் தொழில்நுட்ப அணி கோ.வி.லெனின். மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன் மாவட்ட துணை அமைப்பாளர் தினேஷ் மாணிக்கம். பகுதி அமைப்பாளர் சி.வி.திவான் குமார் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

விழாவில் வருகை தர விற்கும் மற்றும் மாநில மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்

இவ்வாறு 123 வது வட்டக் கழக செயலாளர் மு. இ. ஏழுமலை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி

பகுதி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

அமைப்பாளர் வழக்கறிஞர் பா.அருண்குமார் அறிக்கை!

சென்னை.மார்ச்.7-

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பா. அருண்குமார் அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி பகுதி அமைப்பாளர்கள் - பகுதி துணை அமைப்பாளர்கள் கூட்டம். இன்று 07-03-2026 சனிக்கிழமை. மாலை 05.00 மணியளவில். சைதாப்பேட்டை பஜார் சாலையில் அமைந்துள்ள "சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில்" மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்ரமணியன் தலைமையில். மாநில மாணவர் அணி துணை செயலாளர் சென்னை மண்டல பொறுப்பாளர் தமிழ் க.அமுதரசன் முன்னிலையில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆ.ஈஸ்வரமூர்த்தி. ஜெ.சீனிவாசன்.எஸ். கே.தமிழ்வேல் கவி.எஸ்.விஷ்ணு டி.எஸ்.பி. தமிழ்செல்வன். எஸ்.யமுனாஸ்ரீ ஆகியோர் பங்கேற்றிட நடைபெறும்.

அதுபோது சென்னை தெற்கு மாவட்ட துணை அமைப்பாளர்கள். பகுதி அமைப்பாளர்கள் - பகுதி துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1 மாணவர் அணி சார்பில முதல்வர் பிறந்தநாள் முன்னிட்டு கருத்தரங்கம் நடந்துவது சம்பந்தமாக.

2. மாணவர் அணி ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பா.அருண்குமார் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 73 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி தொகுதி ஆர்கே பேட்டை மேற்கு ஒன்றியம் மாக்மாம்பாபுரம் கிராமத்தில் ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் புதிய விளையாட்டு மைதானம் அமைக்கும் பணியை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம். எல். ஏ. துவக்கி வைத்தார். உடன் ஆர்.கே. பேட்டை மேற்கு ஒன்றிய செயலாளர் மா. இரகு, மற்றும் கழக நிர்வாகிகள் இளைஞர்கள் பொதுமக்கள்கள் பலர் உள்ளனர்.